விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–11.50 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –12.17 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.NO.324/2023**

**Prosecution side witness : எ.ம.சா.4** **Date : 11.12.2024**

| | |
|---|---|
| **Name : சுரேஷ்** | **Taluk : ஈரோடு** |
| **Father Name : மணி** | **Calling : கன்சல்டிங்** |
| **Village : திருநகர்காலனி** | **Age : 42** |

(Complainant and accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கதவு எண்.5/2 திருநகர் காலனி, 3–வது வீதி, கருங்கல்பாளையம், ஈரோட்டில் குடியிருக்கிறேன். என் பூர்விகம் கொளத்தூர். கொளத்தூரிலிருந்து நான் ஈரோடு சென்று 11 வருடங்கள் ஆகிறது. நான் இந்த வழக்கின் வாதியின் தங்கையின் கணவர். நான் தற்போது டுவீலர் கன்சல்டிங் வேலை செய்து வருகிறேன். எதிரி சுதாகர் எனக்கு உறவினர். அண்ணன் முறையாகும். நான், எதிரி சுதாகர், பெரியசாமி மகன் சக்தி மூவரும் சேர்ந்து தொழில் செய்தோம். ஸ்ரீ பாலாஜி பேசன் என்ற பெயரில் கார்மென்ட்ஸ் எக்ஸ்போர்ட் தொழில் நாங்கள் மூவரும் சேர்ந்து செய்தோம். மேற்சொன்ன தொழிலில் நான் தற்போது பங்குதாரராக இல்லை. பெரியசாமி மகன் சக்தியும் தற்போது மேற்சொன்ன தொழிலில் பங்குதாரராக இல்லை. நாங்கள் மூவரும் சேர்ந்து ஆகஸ்ட் 2020–ம் ஆண்டு தொழில் முறிவு ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம். அந்த தொழில் முறிவு ஒப்பந்தத்தில் சுதாகர் என்பவர் எனக்கு ரூ.12,50,000/– தரவேண்டும் என்றும், பெரியசாமி மகன் சக்தி என்பவர் எனக்கு

ரூ.8,00,000/- தர வேண்டும் என்று நிபந்தனைகளுடன் எழுதப்பட்டது. அந்த தொழில் முறிவு ஒப்பந்ததில் நான் கையெழுத்து செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தொழில் முறிவு ஒப்பந்த பத்திரத்தில் மூன்றாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த தொழில் முறிவு ஒப்பந்தம் பத்திரம் என்னிடம் இல்லை. எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. 04.06.2022-ம் தேதி என்னுடைய வங்கி கணக்குக்கு ரூ.50,000/- சுதாகர் என்பவரிடமிருந்து எனக்கு வந்துள்ளது. 04.06.2022-ம் தேதி மற்றொரு ரூ.50,000/- சுதாகர் என்பவரிடமிருந்து என்னுடைய வங்கி கணக்கு வந்துள்ளது. எதிரி சுதாகர் என்னிடம் ரூ.1 லட்சம் பணத்தை வாங்கிக்கொண்டு அதற்கு ஆதரவாக கொடுத்த காசோலையை பணத்தை திருப்பிக்கொடுத்த பிறகும் காசோலையை வைத்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. சக்தியின் மாமியார் அரச்சலூரிலில் இருக்கிறார்கள் என்றும், மேற்சொன்ன அசல் தொழில் முறிவு ஒப்பந்த பத்திரம் அவர்களிடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி சுதாகர் என்னிடம் ரூ.1 லட்சம் பணத்தை வாங்கிக்கொண்டு அதற்கு ஆதரவாக கொடுத்த காசோலையை பணத்தை திருப்பிக்கொடுத்த பிறகும் காசோலையை வைத்து மோசடியாக என்னுடைய மைத்துனர் மனோகரை வைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஸ்ரீ பாலாஜி கார்மென்ட்ஸ் நிர்வாக அனைத்தும் எதிரி சுதாகர் தான் செய்தார் என்றால் சரிதான். அந்த நிறுவனத்திற்குண்டான தொகை வரவு செலவு அனைத்தும் எதிரி சுதாகர் தான் செய்தார் என்றால் சரிதான். எனக்கும், எதிரி சுதாகருக்கும் உள்ள தொடர்பு ஆகஸ்ட் 2020 ஆண்டே

முடிந்தது என்றால் சரிதான். எனக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.18 லட்சத்து 50 ஆயிரம் லண்டன் நிறுவனத்திலிருந்து எதிரி சுதாகருக்கு வர வேண்டிய பணத்தை வைத்து தான் எனக்கு கொடுப்பார் என்றால் அந்த தொகை கம்பெனி சம்மந்தமாக வர வேண்டிய தொகை. என்னிடம் தனிப்பட்ட முறையில் எதிரி ரூ.12.5 லட்சமும், சக்தி ரூ.8 லட்சமும் வாங்கியுள்ளார்கள். அதை தருவதாக சொல்லியுள்ளார்கள். 2020-ம் ஆண்டுக்கு பிறகு எதிரி சுதாகர் என்ன வரவு செலவு செய்கிறார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி மனோகரன் என்பவரிடம் வாங்கிய கடனுக்கும், பரிவர்த்தனை ஆவணங்களுக்கும் எனக்கும் எந்த தொடர்பு கிடையாது என்றால் சரிதான்.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**<br>**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**<br>**மேட்டூர்.**